# இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகம் - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 இலக்க நல்லாட்சிக்கான பொது முயற்சிகளிற்கான வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின்படி, நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருக்க வேண்டிய இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மே 02 இலேயே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா மற்றும் வெளிவாரிக் கற்கைகள் என்பவற்றின் கொடுக்கல்வாங்கங்களின் பெறுமதி பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் ஒருங்கிணைப்பட்டிருக்கவில்லை.

தொடர்பில் நிதிப்பிரமாண இல 396 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூன்று வங்கிக் கணக்குகள் தொடர்பான மீளாய்வாண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சாற்றுகளின்மை

(அ) பின்வரும் வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டின் போதானது மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், காசேடு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு, வங்கிக் கூற்றுக்கள் மற்றும் வேறு முக்கியமான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| செயற்திட்டத்தின் பெயர் | வங்கியின் பெயர் | கணக்கு இலக்கம் |
|---|---|---|
| எஸ்ஈஎன்எஸ்ஏஆர்எம் | மக்கள் வங்கி | 1070025055 |
| ஜீஈபி | இலங்கை வங்கி | 0002920232 |
| சீஐடிஏ | இலங்கை வங்கி | 63074830 |
| என்ரீஎன்யூ | இலங்கை வங்கி | 6312188 |
| சீஈஎவ்ஈ | மக்கள் வங்கி | 1-67-002475-2 |
| சீஎஸ்ஆர்டி | இலங்கை வங்கி | 0002920179 |

(ஆ) ரூபா 5,419,240 கூட்டு மொத்தத் தொகையான 4 கணக்கு விடயங்கள் தொடர்பான வருகை சானறிதழ், கொடுப்பனவு அடிப்படை, உடன்படிக்கைகள், விலைகோரல்கள் மற்றும் பிரயாண ஆவணங்களின் பிரதிகள் போன்ற அத்தகைய ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

### 1.2.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் என்பவற்றிலுள்ள பல ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரிற்கு சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

(i) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 109 மற்றும் 110 ஆம் பிரிவுகள்

(ii) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 மற்றும் 155 ஆம் பிரிவுகள்

(iii) 2006 அரசாங்க கொளவனவு வழிகாட்டடிகளின் 2.14.1 ஆம் பிரிவு

(iv) நிதி பிரமாணங்கள் இல. 138, 395(பீ), 396(டி), 685, 700(3), 700(5), 756, 757, 835(2)(சீ), 835(3) மற்றும் 850 என்பன.

(v) 2001 ஆகஸ்ட் 07 இன் 15/2001 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை

(vi) 2008-2010 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த அறிக்கைகள் இவ்வறிக்கைத் திகதிவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டெழும் செலவினங்களிற்கான ரூபா 393,635,00 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கிற்கு எடுத்த பின்னர் ரூபா. 449,144,987 ஆன பற்றாக்குறையினை முன்னைய ஆண்டில் ரூபா. 365,961,000 ஆன அரச மானியத்தைக் கணக்கில் எடுத்த பின்னரான ரூபா 437,418,960 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது நிதிசார் பற்றாக்குறையில் ரூபா 11,726,027 ஆன அதிகரிப்பைக் காட்டுகிறது.

#### 2.1.2 ஆராய்ச்சி மானியங்களின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதிகள் பயன்படுத்தியமை பற்றி கணக்காய்வில் மெய்மையாய்வு செய்வதற்கு சாத்தியமற்றிருந்தது.

(இ) செயற்திட்ட உத்தியொகத்தரிற்காக பல்கலைக்கழகத்தால் முறையான நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருக்காததுடன் இந்த உத்தியோகத்தர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அல்லது சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி என்போரிடமருந்து எவ்வித அனுமதியும் பெறாமல் சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தியிருந்தார்.

**2.1.10 பீடங்களில் வங்கிக் கணக்குகள் செயற்படுத்துவது மீதான நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகமான நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்களால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பல சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் 2009 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காசேடுகள் முறைப்படி பேணப்பட்டிருக்காததுடன் பல சந்தர்ப்பங்களில் காசேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தின் உரிய பீடத்தின் சபை மற்றும் செனற் என்பவற்றிடமிருந்து அந்த வங்கி கணக்ககளை செயற்படுத்துவதற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பீடங்களால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கின்ற அதிகாரமுடைய துணைவேந்தரால் நியமிக்கப்படாமல் உரிய பீடங்களின் பிடாதிபதிகளால் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

(உ) பல வழங்குனர்களின் பெயர்களில் எழுதப்பட்ட ரூபா 1,945,012 பெறுமதியான 17 காசோலைகள் கொள்வனவு உத்தியோகத்தரால் (பிஓ) கையெற்கப்பட்டிருந்ததுடன் அவர் தனிப்பட்ட ரீதியில் நிதிப்பிரமாணங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி நடைமுறைகளிற்கு முரணாக வழங்குனர்களிற்கு காசோலைகளை வழங்கியிருந்தார். சொல்லப்பட்ட உத்தியோகத்தர் பொருட்கள்/ மூலப்பொருட்களின் கொள்வனவுடன் ஈடுபடுத்தப்பட்டிருந்தாரென அவதானிக்கப்பட்டது.

### 2.1.11. 155 கணனிகள் மற்றும் 06 யூபீஎஸ் என்பவற்றின் கொள்வனவு

மீளாய்வாண்டின் போது ஐஆர்கியூயூஈ செயற்திட்டத்தின் கீழ் 155 கணனிகள் மற்றும் 06 யூபீஎஸ் கள் என்பவற்றின் கொள்வனவுக்காக 2010 ஆகஸ்ட் 3 இல் ரூபா 14,559,150 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், ஒரு சர்வதேச மென்பொருள் கம்பனியிடமிருந்து நன்கொடையாக பெற்றப்பட்ட திறத்தலுக்கான அனுமதிப்பத்திர இருப்பு போதியளவில் உள்ள போதிலும் ரூபா 5,186,455 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 155 திறத்தல்கள் குறிப்புகள் (எக்ஸ்பி தொழில்ரீதியான மூல ஓஈஎம் அனுமதிப்பத்திரத்திற்கு குறைத்து தரப்படுத்தப்பட்ட வின்டோஸ் விஸ்ரா பிஸ்னஸ்) உள்ளடங்கலாக 155 கணனிகளின் கொள்வனவுக்கான கட்டளை வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் கொள்வனவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திர திறத்தல்கள் ரூபா 1,395,000 பெறுமதியான 15 தனிப்பட்ட கணனிகள் மற்றும் 15 யூபிஎஸ்கள் என்பனவற்றின் பரிமாற்றத்தில் வழங்குனர்களிற்கு திருப்பி அனுப்பட்டது. இந்த கொடுக்கல் வாங்கலின் விளைவாக, ரூபா 3,791,455 ஆன நட்டத்தினை பல்கலைக்கழகம் அடைந்திருந்தது.

## 2.2 செயலாற்றல் மீளாய்வு

### 2.2.1 கல்விசார் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 கல்வி ஆண்டுகளிற்காக ஒவ்வொரு பீடங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளாக சித்தியெய்தியோர் எண்ணிக்கை என்பன கீழே தரப்படுகின்றன.

| | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | | | பட்டதாரியாக சித்தியெய்தியோர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பீடம்** | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
| விவசாயம் | 28 | 32 | 32 | 26 | 49 | 46 | 17 | 28 | 24 | 60 | 28 | 16 |

| பீடங்கள் | பரீட்சை நடைபெற்ற காலப்பகுதி | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்திய மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விவசாயம் | 2010 மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் | 221 | 80 |
| கலை | 2010 மார்ச், ஏப்ரல், யூன், யூலை, ஒக்தோபர் மற்றும் நவம்பர் | 1,731 | 1,481 |
| வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் | 2010 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன், யூலை, செப்தெம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் | 456 | 340 |
| விஞ்ஞானம் | 2010 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் | 540 | 167 |
| சுகாதார பராமரிப்பு விஞ்ஞானம் | 2010 யூன், யூலை, நவம்பர் மற்றும் திசெம்பர் | 79 | 59 |
| மொத்தம் | | 3,027 | 2,127 |

(உ) ஒரு மாணவனுக்கான கிரயம்

பல்கலைக்கழகத்தின் 7 பீடங்களிற்காக பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2,325 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மோத்த மீண்டெழும் செலவினம் ரூபா 459,417,277 ஆகும். ஆண்டிற்கான ஒரு மாணவனுக்கான சராசரிக் மீண்டெழும் கிரயம் ரூபா 197,598 ஆக இருந்தது.

(ஊ) மஹாபொல மற்றும் உதவிப்பணம்

மீளாய்வாண்டின் போது 596 மாணவர்களிற்காக மஹாபொல உதவியாக ரூபா 15,290,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 836 மாணவர்களிற்கான மாணவர் உதவிப் பணமாக ரூபா 16,505,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) நூலக நிர்வாகம்

நூலகத்திலிருந்து புத்தகங்களைப் பெற்றிருந்த மாணவர்கள், கல்விசார் உத்தியொகத்தர்கள் மற்றும் கல்விசாரா உத்தியொகத்தர்கள் என்போரால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் 385 புத்தகங்கள் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த புத்தகங்களை திரும்பப் பெறும் நோக்கில் முறையான நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்காததுடன் சேதமடைந்த புத்தகங்கள் தொடர்பில் முறையான நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது 11 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. குழுவானது பல கூட்டங்களில் கணக்காய்வு ஐய வினாக்களிற்கு பதிலளிப்பதற்கு சிபார்சு செய்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 7 கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிப்பதற்கு நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பிணைமுறிகள் மற்றும் உடன்படிக்கைகளின் மீறல்

புலமைப்பரிசிலில் வெளிநாடு சென்றிருந்த 57 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் பூர்த்தியான பின்னர் நாட்டிறகுத் திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கைகயிலுள்ள ஏற்பாடுகளை மீறயிருந்த 57 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 70,407,561 ஆன தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பிணை முறிப் பெறுமதியும் செலுத்தியிருக்கவில்லை. 5 ஆண்டுகளிற்கு மேலாக, 4 இலிருந்து 5 ஆண்டுகள் வரை, 1 இலிருந்து 3 ஆண்டுகள் வரை மற்றும் 1 ஆண்டினைவிடக் குறைவாக நிலுவையாகவிருந்த முறையே ரூபா 55,501,765, ரூபா 1,747,170, ரூபா 9,617,877 மற்றும் ரூபா 3,540,748 என்பவற்றினை அறவிட வேண்டிய தொகை உள்ளடக்கியது.

(ஆ) பிணைமுறிகளின் பணப்பெறுமதியைச் செலுத்தத்தவறிய விரிவுரையாளர்கள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.8 ஆம் பிரிவின்படி உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 தீர்க்கப்படாத விடயங்கள்

பல்கலைக்கழகத்தின் முன்னைய ஆண்டு கணக்குகள் மீதான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் 2011 ஆகஸ்ட் 31 வரை கூட சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்காண்டு | அறிக்கையிலுள்ள பந்திக்கான தொடர்பு | விடயம் |
|---|---|---|
| 2009 | 2.2.3 | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் |
| | 2.2.4 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிலுள்ள குறைபாடுகள் |
| | 3.1.5 | இனங்காணப்பட்ட நட்டங்கள் |

### 2.2.5 கூட்டிணைந்த திட்டம்

2003-2007, 2007-2011 மற்றும் 2010-2015 ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 2 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்படி உரிய தகவல்கள் கூட்டிணைந்த திட்ம் கொண்டிருக்காததுடன் அவை வருடாந்தம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) முற்பணங்களின் தீர்ப்பனவு

(ஆ) வாகனங்களின் பயன்பாடு

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள்

(உ) பாதீடு